**செய்தி வெளியீடு எண்:988** **நாள்:22.12.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னை –32, கிண்டியில் இயங்கி வரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் Group –I & Group –II தேர்வுகள் மற்றும் வங்கித் தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் மாணாக்கர்களுக்கு, பாடக்குறிப்புகள் மற்றும் மாதிரித் தேர்வுகள் வழங்கப்படுகின்றன.

நேரடி மற்றும் இணையவழியாக நடைபெறும் இவ்வகுப்புகளை சிறந்த முறையில் நடத்திட வேண்டி, உரிய கல்வித் தகுதி மற்றும் போட்டித் தேர்வு வகுப்புகளில் முன் அனுபவம் கொண்ட பாட வல்லுநர்கள் தங்கள் சுய விவர குறிப்புகளை கீழே அளிக்கப்பட்டுள்ள statecareercentre@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் இயக்குநர் திரு.K. வீரராகவ ராவ், IAS., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை
கிண்டி, சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**